டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.08.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 052 - Madurai | Online Edition

# குறு, சிறு, நடுத்தர தொழில்துறையின் பொருட்களை ஏற்றுமதி செய்வது குறித்தக் கருத்தரங்கம் நடைபெற்றது

சென்னை, ஆக.20

குறு, சிறு, நடுத்தர தொழில்துறையின் உற்பத்திப் பொருட்களை உள்ளூரிலிருந்து உலக நாடுகளுக்கு டிஜிட்டல் வர்த்தம் மூலம் ஏற்றுமதி செய்வது குறித்தத் தேசிய அளவிலான கருத்தரங்கம் சென்னை ஐஐடி-ல் ஆகஸ்ட் 18 அன்று நடைபெற்றது.

மத்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில்துறை அமைச்சகம் (எம்எஸ்எம்இ) ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கில் குறு, சிறு, நடுத்தர தொழில்துறையினர், தொழில்முனைவோர், மாண வர்கள், கொள்கை வகுப்பாளர்கள், நிதி நிறுவனப் பிரதிநிதிகள், ஏற்றுமதியாளர்கள், டிஜிட்டல் வர்த்தக நிபுணர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குறு, சிறு, நடுத்தரத் தொழில்துறையின் தயாரிப்புகளைத் தேசிய, சர்வதேச சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்கான நடைமுறை வழிமுறைகள் குறித்து விவாதித்தனர்.

இக்கருத்தரங்கில் தொடக்க அமர்வில் சிறப்புரையாற்றிய தமிழ்நாட்டின் எம்எஸ்எம்இ துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரவீன் யாதவ், டிஜிட்டல் வர்த்தகம் குறு, சிறு, நடுத்தர தொழில்துறையை உலகளாவியச் சந்தைகளை அணுகுவதற்கு வழிவகை செய்துள்ளதாகத் தெரிவித்தார். மேலும் இதற்கு உகந்த சூழலை உருவாக்க மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே வலிமையான ஒருங்கிணைப்புத் தேவை என்று அழைப்பு விடுத்த அவர் இதன் மூலம் குறு, சிறு, நடுத்தர தொழில்துறையின் உலகளாவிய போட்டித் தன்மையை விரைவாக எதிர்கொள்ள முடியும் என்று கூறினார்.

# மாநில அளவிலான தேனீ வளர்ப்பாளர்கள் சந்திப்பு



மதுரை, ஆக.20

வேளாண்மை அறிவியல் நிலையம் மதுரை மற்றும் கதர் மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் இணைந்து மாநில அளவிலான தேனீ வளர்ப் பாளர்கள் சந்திப்பை 19.08.26 அன்று நடத்தினர். இந்நிகழ்ச்சியில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் (பொறுப்பு) முனைவர் தி.ராகவன், மதுரை சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மை முனைவர் சா. காஞ்சனா மற்றும் உதவி தோட்டக்கலை இயக்குனர் தாமரைச்செல்வி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். வேளாண்மை அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி.சுரேஷ் வரவேற்புரை ஆற்றினார். மதுரை கதர் மற்றும் கிராமத்தொழில் ஆணைய தேன் துறை அலுவலர் மு.கலிபூர் ரகுமான், திட்டம் குறித்து விளக்க உரை ஆற்றினார். கதர் மற்றும் கிராம தொழில் ஆணைய உதவி இயக்குனர் அன்புச் செழியன், விழாத் துவக்க உரையாற்றினார். கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைய உதவி இயக்குனர் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் அதன் பயனாளிகளுக்கான தகுதி விவரங்கள் குறித்தும் விளக்கம் அளித்தார். இதனைத் தொடர்ந்து முன்னோடி தேனீ வளர்ப்பாளர்களுடன் கலந்துரை யாடல் நடைபெற்றது. முனைவர் இ.சுப்பிரமணியன், தொழில்நுட்ப வல்லுநர், உழவியல் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர், திருப்பூர், சென்னை, கன்னியாகுமரி, திருப்பத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த 120 தேனீ வளர்ப்பார்கள் கலந்து கொண்டனர். வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் கதர் மற்றும் கிராம தொழில்கள் ஆணையத்தின் மூலம் தேனீ வளர்ப்பு பயிற்சி பெற்று தற்போது தேன் உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்களாக உள்ளவர்கள், தங்களது பொருள்களை கண்காட்சி மூலம் காட்சிப் படுத்தியிருந்தனர். இந்நிகழ்வின்போது வேளாண் அறிவியல் நிலையத்தின் சாதனைகள் குறித்த குறுந்தகடு, தேனீ வளர்ப்பு குறித்த குறுந்தகடு, சிறிய தேன் கூடு வண்டு பற்றிய கையேடு முதலியவை வெளியிடப்பட்டன. மேலும் தேன் பிரித்தெடுக்கும் கருவி தேனீ வளர்ப்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மக்காச்சோளம் உற்பத்தி தொழில்நுட்பம் என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி




சேலம், ஆக.20

சேலம் மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி மக்காச் சோளம் உற்பத்தி தொழில் நுட்பம் என்ற தலைப்பில் பெத்த நாயக்கன்பாளையம் கிராமம் காளிச்செட்டியூர் பகுதியில் 19.08.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில், அருணா, வேளாண்மை துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) சேலம், முன்னிலையில் நடைபெற்றது. மேலும் மண் மாதிரி பரிசோதனை, மண்வள மேலாண்மை, சமச்சீர்ச உரப்பயன்பாடு மற்றும் உரப்பயன்பாட்டு முறைகள், மண் வள மேலாண்மை, நீர் மேலாண்மை, ஊட்டச்சத்து, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, களை மேலாண்மை போன்ற அனைத்து தொழில் நுட்பங்களையும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் மௌலிதரன், வேளாண்மை அலுவலர், வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலை துறையின் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றியும், வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் வயல்களில் ஈரத்தன்மை குறைந்து வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சி காலங் களில் வீரியமான விதை முளைப்பதற்கு விதை நேர்த்தி முறைகள் பின்பற்ற வேண்டும் என்று கூறினார். இப் பயிற்சியில் பயிற்சியாளர் வெங்கடாசலம், NGO, மக்காச்சோள உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றியும் மக்காச்சோளம் சாகுபடி மேலாண்மை பற்றியும் படைப்பு தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர், விவசாய அடையாள எண் பதிவு செய்வதை பற்றி கூறினார். இப் பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண் டனர். அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை அட்மா பணியாளர்கள் ராஜ்குமார் மற்றும் பிரியங்கா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**18. கொண்டைக்கடலை சூப்**

**தேவையான பொருட்கள்**

வேகவைத்த கொண்டைக்கடலை — 1 கப்

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

மிளகு

உப்பு

**செய்முறை**

அரைத்து 10 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**



# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி




சேலம், ஆக.20

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், புனல்வாசல் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான 'ஒருங்கிணைந்த பண்ணையம்' குறித்த பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில், மக்காச்சோளம் சாகுபடியுடன் மண்புழு உரம் தயாரித்தல், மாடு, ஆடு மற்றும் கோழி வளர்த்தல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து எவ்வாறு வருமானத்தை அதிகரிப்பது என்பது குறித்து பயிற்சியாளர் பிரவீன் விரிவாக விளக்கினார். தொடர்ந்து, மக்காச்சோள பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் இனக்கவர்ச்சி பொறி பயன்படுத்தும் முறை குறித்து துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் செயல்விளக்கம் அளித்தார்.

மேலும், வேளாண்மைத் துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்து உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்ச்செல்வனும், மண்புழு தயாரிப்பு குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தியும், மண் மாதிரி எடுப்பதன் அவசியம் குறித்து உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷும் எடுத்துரைத்தனர்.

இத்துடன், நுண்ணீர் பாசனத் திட்டம் மற்றும் விவசாய அடையாள அட்டை பதிவு செய்தலின் அவசியம் குறித்து உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜும், வறட்சி மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேலும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# சிங்கம்புணரி வட்டாரத்தில் அங்கக வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி




சிவகங்கை, ஆக.20

சிவகங்கை மாவட்டம், சிங்கம் புணரி வட்டாரம், வேளாண்மைத் துறையின் மூலமாக மாநில விரிவாக்க சீரமைப்பு திட்டம்–அட்மா திட்டத்தின் கீழ் 14.08.26 அன்று அங்கக வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி இடையப்பட்டி கிராமத்தில் சிங்கம்புணரி வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) நா.ஞானவேல் தலைமையில் நடைபெற்றது.

இதில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) நா.ஞானவேல் தலைமை வகித்துப் பேசியதாவது, ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு மாற்றாக இயற்கை பூச்சி விரட்டிகள், இயற்கை உரங்கள் அதிகளவில் உள்ளன. இவற்றைத் தயாரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகள் அறிந்து கொண்டு, நஞ்சு இல்லாத உணவு தானியங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றார் மற்றும் அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றி கூறினார். மேலும் மத்திய, மாநில அரசு திட்டங்கள் மற்றும் இயற்கை வேளாண்மைக்கு உயிர் உரங்கள் பயன்பாடுகள் மேலும் தற்பொழுது வட்டாரம் முழுவதும் நடைபெற்று கொண்டிருக்கும் விவசாயிகள் தரவுகள் பதிவுகள் பற்றியும், மின்னனு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு பற்றியும் (Digital crop survey) விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துரைத்தார்.

துணை வேளாண்மை அலுவலர் ப.சீனிவாசன், இயற்கை வேளாண்மை மண் மாதிரி சேகரித்தல் மற்றும் மண் ஆய்வின்படி விவசாயிகள் உரமிடல் வேண்டும். மேலும் நெல் ரகங்கள் தேர்வு குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் எல்நினோ 2026 எனப்படும் பருவநிலை மாற்றத்திலிருந்து விவசாயத்தை பாதுகாக்க வழிமுறைகள் பற்றி விரிவான முறையில் விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார். இயற்கை முன்னோடி விவசாயி உ.சிவராமன், இயற்கை முறையில் பயிர் சாகுபடி முறைகள் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் பாரம்பரிய இரகங்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். பயிர் பாதுகாப்பு மற்றும் களை கட்டுபாடு, வேளாண் சூழலியல் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்து விவசாயி களுக்கு விரிவான முறையில் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் உழவன் செயலி மூலம் அவர் பயன் அடையும் விதத்தை விவசாயிகளுக்கு அனுபவம் பூர்வமாக விவரித்து விவசாயிகளை செயலிய பதிவிறக்கம் செய்ய வைத்தார்.

இறுதியில் துணை அலுவலர் ப.சீனிவாசன், விவசாயிகளுக்கான நில உரிமை அடையாள எண் பதிவு செய்தார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்களுக்கும் கிராம விவசாய மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.கருஷ்ணசாமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பூ.அழகுசுந்தரம் செய்திருந்தனர்.



# மெய்யூர் கிராம விவசயிகளுக்கு மண் வள மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



திருவள்ளூர், ஆக.20

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் பூண்டி வட்டாரத்தில் உள்ள மெய்யூர் கிராமத்தை சார்ந்த 40 விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை என்ற தலைப்பின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலைய முனைவர் சிவகாமி மற்றும் துணை வேளாண்மை அலுவலர் B.முத்து குமார் தலைமை தாங்கி பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் பற்றியும் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார், இந்த பயிற்சிக்கு திரூர் குப்பம் வேளாண்மை அறிவியல் நிலையம் முனைவர் சிவகாமி, பேசுகையில் மண் வள மேலாண்மை என்பது பயிர் விளைச்சலைத் தக்க வைப்பதற்காக மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது. தமிழ்நாட்டில், செம்மண் மற்றும் கருமண் வகைகள் அதிகமாக இருப்பதால், மண் தரம் குறைவதைத் தடுக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, அங்கக உரங்கள் மற்றும் வழக்க மான மண் பரிசோதனைகள் தேவைப்படுகிறது.

**மண் ஆரோக்கியத்தின் முக்கிய அம்சங்கள்**

1.நல்ல மண் அமைப்பு மற்றும் தளர்வு (புளபொழப்பு தன்மை) காற்று மற்றும் நீர் ஓட்டத்தை அனுமதிக்கிறது.

2.சமச்சீர் ஊட்டச்சத்துக்கள், நச்சுத்தன்மை அல்லது கடுமையான குறைபாடுகளைத் தடுக்கின்றது.

3.நுண்ணுயிரிகள் மற்றும் மண்புழுக்கள் தாவரங்களுக்கு உணவளிக்க கரிமப் பொருட்களை உடைக்கின்றது.

**பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் கரிம உரங்களைப் பயன்படுத்தவும்**

1. பண்ணை உரம் (மாட்டு தொழு உரம்) மற்றும் பசுந்தாள் உரம் பயன்படுத்தவும்.


2. அறுவடைக் கழிவுகளை எரிப்பதைத் தவிர்க்கவும்; உர செலவுகளைச் சேமிக்க அவற்றை உரமாக மாற்றவும்.

3. குறிப்பிட்ட ஊட்டச்சத்து அளவுகளைச் சரிபார்க்க, மன்வள இணையதளம் மற்றும் மண் சுகாதார அட்டைகள் போன்ற திட்டங்களையும் பயன்படுத்தலாம்.

4. மண் நுண்ணுயிரிகளைப் பாதுகாக்க மற்றும் ஈரப்பதத்தைத் தக்கவைக்க கடினமாக உழுவதைக் குறைக்கலாம்.

பசுந்தாள் உரப்பயிர், இயற்கை இடுபொருட்கள் பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமிர்தக்கரைசல், மீன் அமினோ அமிலங்கள் மற்றும் பூச்சி விரட்டி தயாரித்தல் குறித்தும் விளக்கி கூறினார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுனில்குமார் பேசுகையில் மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண் மாதிரியின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கி கூறினார். இந்த பயிற்சியில் கலந்துக்கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் சிறுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டது. வேளாண் கண்காட்சியாக உயிர் உரங்கள், நெல், நுன்னுட்ட கலவைகள், பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் முக்கியத்து வத்தினை பற்றியும் உயிர் உரத்தின் மூலம் விதை நேர்த்தி செய்தல் குறித்தும் உதவி தொழில்நுட்ப மேலாளர் எடுத்து கூறினர்.

மேலும் இந்த பயிற்சிக்கு கருத்துக்காட்சிக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பிட்டார் பிரான்ஸ் பாபு மற்றும் அழகுசெல்வன் செய்தனர்.



# சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத்திறனை அதிகரித்தல் பயிற்சி




சேலம், ஆக.20

சேலம் வட்டாரம் எருமாபாளையத்தில் வேளாண்மை துறையின் அட்மா திட்ட சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் உரப்பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் என்ற விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி, மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் பயிருக்கு தேவையான பேரூட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை சரியான அளவில் பயன்படுத்துதல், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துக்களை சமச்சீராக வழங்குதல் மற்றும் இயற்கை உரங்கள், பசுந்தாள் உரங்கள், உயிர் உரங்களை ஒருங்கிணைத்து பயன்படுத்துதல் குறித்து விளக்கம் அளித்தார். சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, வேளாண் அடுக்ககத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்யவும் மேலும் உட்பிரிவுகளை இணைக்காத விவசாயிகள் உட்பிரிவுகளை இணைக்கவும் கேட்டுக் கொண்டார். ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் இணைப்பேராசிரியர் சாரா பர்வீன் பானு, வெட்டிவேர் சாகுபடி செய்வதன் மூலம் மண்ணரிப்பை தடுப்பது பற்றியும் வெட்டிவேர் மதிப்புக்கூட்டி வாசனை திரவியங்களுக்கான தொழிற்சாலைகளுக்கு விற்பதன் மூலம் விவசாயி கூடுதல் லாபம் பெறலாம் என தெரிவித்தார். மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ெல்வி ராஜ்குமார், உரங்களை சரியான அளவு, நேரம், இடம் மற்றும் முறையில் பயன்படுத்துவதன் மூலம் உரச்சத்து இழப்பை குறைத்து, பயிர்களின் ஊட்டச்சத்து உறிஞ்சும் திறனை அதிகரித்து, உற்பத்திச் செலவைக் குறைத்து மகசூல் மற்றும் வருமானத்தை மேம்படுத்தலாம் என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# ஹைட்ரஜன், எத்தனால் இரண்டுக்கும் என்ன வேறுபாடு தெரியுமா?




நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எரிப்பொருள் (FUEL) தேவைகளுக்கு மத்தியில் உலக நாடுகள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத மாற்று வழிகளைத் தீவிரமாக தேடி வருகின்றன. அந்த வகையில் வரும் காலத்தில் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு மாற்றாக வரப்போகும் பசுமை எரிப்பொருட்களான ஹைட்டிரஜன், (HYDROGEN) எத்தனால் (ETHANOL) இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை தெரிந்து கொள்ளுவோம்.

**ஹைட்ரஜன் (HYDROGEN)**

பேரண்டத்திலேயே மிக அதிகமாக காணப்படும் வாயு, ஹைட்ரஜன். உலகிலேயே மிகவும் இலகுவான தனி முகமாக விளங்குகிறது. இது எரியும் போது கழிவுகளுக்கு பதிலாக நீரையே வெளியிடுவதால் மிகவும் தூய்மையான எரிபொருளாக கருதப்படுகிறது. இவை நிறம், மணம் மற்றும் சுவையற்ற வாயு ஆகும்.

மிக மிக லேசானது மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடியது. இதனுடைய மூலக்கூறு வாய்ப்பாடு ($H_2O$). இது எரியும் போது தூய்மையான நீராவியை மட்டுமே வெளியேற்றும். சுற்றுச் சூழலை சிறிதும் மாசுபடுத்தாது. இதனை சேமித்து வைப்பதும், பாதுகாப்பாக கொண்டு செல்வதும் மிகவும் கடினம். இதற்கான தொழில்நுட்ப செலவும் அதிகம். நீரிலும் சூரியன் மற்றும் நட்சத்திரங்களின் இயற்கை ஆற்றல் மூலமாகவும் அதிகமாக காணப்படும்.

ஹைட்ரஜன் விண்வெளி ராக்கெட்டுகள் எரிபொருள் செல்கள்

மின்சார உற்பத்தி மற்றும் கார்களில் பெருமளவில் பயன் படுகிறது.

**எத்தனால் (ETHANOL)?**

கரும்பு மற்றும் மக்காசோளம் போன்ற தாவரங்களிலிருந்து, நொதித்தல் (FERMENTATION) முறையில், பெறப்படும் ஆல்கஹால் வகை உயிரி பொருள் (BIO FUEL) ஆகும். இது நிறமற்ற திரவம், ஆவியாக்கூடிய தன்மை கொண்டது. குறிப்பிட்ட மணத்தைக் கொண்டிருக்கும். இதனுடைய மூலக்கூறு வாய்ப்பாடு $C_2H_5OH$. தாவரங்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க உயிரி வளங்களிலிருந்து, தயாரிக்கப்படும் எத்தானல் பெட்ரோலுடன் எளிதாக கலந்து, பயன்படுத்தக் கூடிய ஒரு மீளுருவாக்க எரிபொருளாகும். இது எரிபொருளின் (PETROLEUM), தேவையை குறைப்பதோடு, விவசாயத் துறைக்கும் கூடுதலான பொருளாதார மதிப்பை உருவாக்கிறது. இயற்கை பழங்கள் நொதிக்கும் போது இது சிறிதளவு உருவாகும். தற்போது கிருமி நாசினியாகவும் மருந்துகளில் பயன்படுகிறது.

ஹைட்டிரஜன் வாயு வடிவில் தூய்மையான ஆற்றலைத் தரும். எத்தனால் திரவ வடிவில் பசுமை ஆற்றலைத் தருகிறது. இரண்டுமே நம் பூமியை காப்பாற்ற போகும் வருங்கால எரிபொருட்களாகும். எதிர்கால உலகம் பசுமை ஆற்றலை நோக்கி, வேகமாக பயணித்து வருகிறது. அந்த பயணத்தில் இவை இரண்டுமே (HYDROGEN, ETHANOL) முக்கிய பங்காக உள்ளது. சுற்றுப்புற சூழலியல்கேற்ற பசுமை எரிபொருளை ஆதரிப்போம், மாசில்லாத பூமியை அடுத்த தலைமுறைக்கு பரிசாக வழங்குவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# மாம்பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் மூலம் தொழில்முனைவோர் உருவாக்குதல் பற்றிய செயல்விளக்கப் பயிற்சி



கன்னியாகுமரி, ஆக.20

கன்னியாகுமரி மாவட்டம், திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் நிலையம் மாம்பழத்திலிருந்து மதிப் பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் மூலம் தொழில் மு னை வோ ர் உருவாக்குதல் பற்றிய செயல்விளக்கப் பயிற்சி' 18.08.26 மற்றும் 19.8.26 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் (18.08.26) அன்று காலை 10.00 மணியளவில் பயிற்சியின் துவக்கவிழா ஆரம்பிக்கப்பட்டு இச்செயல் விளக்கபயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலை யத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் சா.சுரேஷ், துவக்கவுரையாற்றி பயிற்சியின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். இரண்டு நாட்கள் 18.08.26 மற்றும் 19.8.26 முனைவர் ஜெ.செல்வி, உதவிப் பேராசிரியர் (உணவியல் மற்றும் சத்தியல் துறை) மாம்பழத்தின் முக்கியத்துவம், சத்துக்கள், மருத்துவ பயன்கள் பற்றியும், மாம்பழத்திலிருந்து ஜாம், பழபானம் (ஸ்குவாஷ்), புரதச் சத்து நிறைந்த மாம்பழ பார், தயார்நிலை பானம், மாம்பழக் கூழ்பதபடுத்துதல், உலர்த்துதல் தொழில்நுட்பங்கள் மில்க் சேக், மாம்பழ மிட்டாய் பற்றி செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தார். மேலும் சந்தைபடுத்துல் வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். இப்பயிற்சியின் நிறைவு விழாவில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் சிறப்புரை யாற்றினார். இத்தொழில்நுட்ப பயிற்சியில் 10 பண்ணை மகளிர்கள், சுயஉதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாம்பழத்தின் முக்கியத்துவம், சத்துக்கள், மருத்துவ பயன்கள் பற்றியும், மாம் பழத்திலிருந்து ஜாம், பழபானம் (ஸ்குவாஷ்), புரதச் சத்து நிறைந்த மாம்பழ பார், தயார்நிலை பானம், மாம்பழக் கூழ் பதப்படுத்துதல், உலர்த்துதல் தொழில்நுட்பங்கள் மில்க் சேக், மாம்பழ மிட்டாய் பற்றி தெரிந்து கொண்டு பயனடைந்தார்கள்.

# அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, ஆக.20

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம், காரைக்குளம் கிராமத்தில் வேளாண்மைத் துறையின் மூலமாக மாநில விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 20.08.26 அன்று வன்னார வயல் கிராமத்தில் விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. இப்பயிற்சியில்





இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன் தலைமையேற்று இளையான்குடி வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் விபரம் மற்றும் நெல் விதை தேர்வு குறித்தும் மேலும் விவசாயி களுக்கு விவசாய விளைபொருட்களின் இறுதி அளவும் தரமும் பயிர் அறுவடையின் போது விவசாயிகள் அல்லது பிற உணவு பொருட்களை கையாளபவர்களால் பின்பற்றப்படும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை நடைமுறைகளை மட்டுமே சார்ந்துள்ளது. இந்த நடைமுறைகளில் சில கையாளுதல் தரம் பிரித்தல் முன் பதப்படுத்துதல் உலர்த்துதல் பழுக்க வைத்தல் பொட்டலமிடுதல் தற்காலிக சேமிப்பு போக்குவரத்து விநியோகம் மற்றும் சாத்திய மான இடங்களில் நீண்ட கால சேமிப்பு அகியவை அடங்கும் என விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக்கூறினார்.

ராஜேஷ் நல்லையா, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் முக்கிய நோக்கம் மற்றும் அம்சங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். உணவை அதிக சத்தான தாகவும் எளிதில் செரிமானம் ஆகக்கூடியதாகவும் மாற்றுவதும் அதன் சேமிப்பு காலத்தை நீட்டிப்பதும் ஆகும். மாறிவரும் வாழ்க்கை முறைகள் மற்றும் நுகர்வு பழக்க வழக்கங்கள் காரண மாக இது சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளது. இளையான்குடி வேளாண்மை அலுவலர் நாகராசு, விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை மத்திய மற்றும் மாநில திட்டங்கள் மற்றும் மண் வளத்திற்க்கு ஏற்ப கரிம உரங்கள், உயிர் உரங்கள், அராசயன் உரங்கள் போன்றவற்றை தேவைகேற்ப மற்றும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் மண் வள அட்டையின் பரிந்துரைகளின்படி பயன்படுத்த வேண்டும். இதனால் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மேம்படும். இதன் மூலம் தரமான மற்றும் அதிக விளைச்சல் கிடைக்கும் என விவசாயி களுக்கு எடுத்துக்கூறினார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கி.கோகிலா, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்றுச் சூழல் பாதிக்கப்படாத வகையில் தழைச்சத்து மண்ணில் அதிகரிக் கலாம். இதனால் இராசயன உரங்கள் பயன்பாடுகள் குறைக்கப் பட்டு இயற்கை முறையில் இயற்கை உரங்களை பயன்படுத்து வதன் மூலமாக மகசூல் அதிகரிக்கப்படுகிறது. உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ், பயிற்சி ஏற்பாடுகளை செய்து உயிர் உரங் களை பயன்படுத்தி விதைநேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

# பாகற்காயில் பழ ஈக்களை கட்டுப்படுத்த மீன் உணவுப் பொறி ஒரு களச் செயல்விளக்கம்



தேனி, ஆக.20

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களான பா.ரோகன், க.கோகுல் சதுர்வேதி, மூ.குணால், பா. ரோஹித் ராஜ், கை.ந.கவுரேஷ், பா.பத்மநாபஹரி மற்றும் சுதிர் ரெட்டி ஆகிய நாங்கள், RAWE (Rural Agricultural Work Experience கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதியாக, தேனி மாவட்டம் ஒடப்பட்டி கிராமத்தில் பாகற்காய் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பழ ஈக்களை கட்டுப்படுத்துவதற் கான மீன் உணவுப் பொறி (Fish Meal Trap) குறித்து செயல் விளக்கம் அளித்தோம்.

## பாகற்காயில் பழ ஈயின் பாதிப்பு

பாகற்காய் சாகுபடியில் பழ ஈ முக்கியமான பூச்சிகளில் ஒன்றாகும். பெண் பழ ஈக்கள் இளம் காய்களில் முட்டையிடுவதால், அதிலிருந்து வெளிவரும் புழுக்கள் காயின் உட்பகுதியைச் சேதப்படுத்துகின்றன. இதனால் காய்களில் அழுகல் ஏற்பட்டு, தரம் மற்றும் சந்தை மதிப்பு குறையக்கூடும். எனவே, பழ ஈக்களின் எண்ணிக்கையை ஆரம்ப நிலையிலேயே கண்காணித்து கட்டுப்படுத்துவது பாகற்காய் சாகுபடியில் முக்கியமானதாகும்.

## மீன் உணவுப் பொறியின் அடிப்படை

மீன் உணவு பழ ஈக்களை ஈர்க்கக்கூடிய வாசனையை வெளியிடு கிறது. இந்த ஈர்ப்பு தன்மையைப் பயன்படுத்தி, வயலில் உள்ள முதிர்ந்த பழ ஈக்களைப் பொறிக்குள் ஈர்த்து பிடிப்பதே மீன் உணவுப் பொறியின் அடிப்படை நோக்கமாகும்.

## மீன் உணவுப் பொறி தயாரிக்கும் முறை

முதலில் பொருத்தமான சிறிய கொள்கலன் அல்லது பொறியைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதில் ஈரமான மீன் உணவை ஈர்ப்புப் பொருளாக வைக்க வேண்டும். பழ ஈக்கள் உள்ளே செல்லும் வகையில் பொறியில் பொருத்தமான சிறிய திறப்புகள் ஏற்படுத்த வேண்டும். தயாரிக்கப்பட்ட பொறியை பாகற்காய் பந்தல் பகுதியில், பழ ஈக்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் இடங்களில் தொங்கவிட வேண்டும்.

பழ ஈக்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் இடங்களில் தொங்கவிட வேண்டும். பொறிகளைத் தொடர்ந்து கண்காணித்து, அதில் சிக்கியுள்ள பழ ஈக்களின் எண்ணிக்கையை கவனிக்க வேண்டும். மீன் உணவு உலர்ந்து அல்லது அதன் ஈர்ப்பு தன்மை குறைந்ததும், தேவைக்கேற்ப புதிய ஈர்ப்புப் பொருளை மாற்ற வேண்டும்.

### செயல்விளக்கத்தின் போது வழங்கப்பட்ட அறிவுரைகள்

செயல்விளக்கத்தின் போது, பழ ஈக்களின் தாக்கத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது, பாதிக்கப்பட்ட மற்றும் கீழே விழுந்த காய்களை வயலில் இருந்து அகற்றுவது, வயலைச் சுத்தமாகப் பராமரிப்பது மற்றும் பொறிகளைத் தொடர்ந்து கண்காணிப்பது போன்ற ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினோம். மேலும், ஒரு குறிப்பிட்ட பொறி முறையை மட்டும் நம்பாமல், வயல் சுகாதாரம், கண்காணிப்பு மற்றும் தேவையான பிற பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மை முறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் பழ ஈ தாக்கத்தை சிறப்பாகக் கட்டுப்படுத்த முடியும் என்பதை எடுத்துரைத்தோம்.

### மீன் உணவுப் பொறியின் நன்மைகள்

பழ ஈக்களை ஈர்த்து பிடிக்க உதவுகிறது. வயலில் பழ ஈக்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க உதவுகிறது. பழ ஈக்களின் எண்ணிக்கையைக் குறைக்க உதவும் ஒரு மேலாண்மை முறையாகும். தயாரித்து பயன்படுத்துவதற்கு எளிமையான முறையாகும். விவசாயிகளுக்கு எளிதில் புரியும் வகையில் செயல்விளக்கம் அளிக்க முடியும். ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தலாம்.

# மண் நல மேலாண்மை

சேலம், ஆக.20

மண்ணின் தன்மைக்கேற்பவும் அதிலுள்ள ஊட்டச்சத்துகளின் விகிதத்திற்கு ஏற்பவும் சரியான அளவில் ஊட்டச்சத்துக்களை பரிந்துரைக்கவும், அதிகளவு இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்கவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைத்து நல்ல தரமான நிலத்தை உருவாக்கவும், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அட்மா திட்டத்தின் மண் நல மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி வீரபாண்டி வட்டாரம் கல்பாரப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.




துணை வேளாண்மை அலுவலர் (பொ) ப.மூர்த்தி, தலைமை தாங்கி, மண் வளத்தை பாதுகாக்க மண் புழு, தொழு உரம், பசுந்தாள் உரம், மக்கும் உரங்கள் இட்டு மண் வளத்தை பாதுகாக்க வேண்டும் என்று எடுத்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் பற்றி எடுத்து கூறினார்.

முன்னோடி விவசாயி எம்.முத்துராமன், பயிற்சியாளராக கலந்து கொண்டு மண் மாதிரி எடுக்கும் வழிமுறைகள், பயிருக்கு தேவைப்படும் பேரூட்டம் மற்றும் நுண்ணுட்டம் பற்றியும், பஞ்ச காவ்யா, 3ஜி, தேமோர் கரைசல், பூச்சி விரட்டி, ஊட்டமேற்றிய தொழுஉரம் கொண்டு மண் வளத்தை காப்பது குறித்து விரிவாக உரிய செயல்விளக்கங்களுடன் எடுத்து கூறினார். உதவி வேளாண் அலுவலர் ச.தனபால், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி,சரஸ்வதி, தீபன் முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட 40 விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கபட்டது.

# இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம்




விருதுநகர் ஆக.20

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், இப்கோவின் நானோ திரவ உரங்களான நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி., நானோ காப்பர், நானோ ஜிங்க், சாகரிகா திரவ உரங்கள், இப்கோ சொட்டு நீர் உரப்பாசன உரங்கள், நேச்சுரல் பொட்டாஷ், வேப்பம் பிண்ணாக்கு, இப்கோ உயிர் உரங்கள், இப்கோ நுண்ணூட்ட மற்றும் இதர உரங்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன.

இத்திரவ உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறை குறித்து விவசாயி களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. மேலும், குருணை உரங்களுடன் ஒப்பிடும் போது நானோ உரங்களின் விலை குறைவு மற்றும் பயன்பாட்டின் எளிமை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தொழகிரிப்பட்டியில் இலை நிற அட்டை செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திண்டுக்கல், ஆக.20

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த B.Sc. (ஹானர்ஸ்) வேளாண்மை இறுதியாண்டு மாணவிகள் தனுஷ்யா, கீர்த்தனா, ஜீவிதா, பிரதீபா, அகல்யா மற்றும் ப்னா ஆகியோர் தொழகிரிப்பட்டியில் கோவிந்தராஜின் வயலில் இலை நிற அட்டை (Leaf Colour Chart – LCC) குறித்த செயல் விளக்கத்தை மேற்கொண்டனர்.



இச்செயல்விளக்கத்தின் போது, நெற்பயிரின் இலை நிறத்தை இலை நிற அட்டையுடன் ஒப்பிட்டு, பயிரின் நைட்ரஜன் தேவையை எவ்வாறு கண்டறிவது என்பது குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு விளக்கினர். வயலில் ஆரோக்கியமான இலைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் பச்சை நிறத்தை LCC அட்டையின் நிறங்களுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும் முறையை நேரடியாக செய்து காண்பித்தனர்.

மேலும், LCC மதிப்பீட்டின் அடிப்படையில் பயிருக்கு நைட்ரஜன் உரத்தை தேவையான நேரத்தில் மட்டும் வழங்குவதன் மூலம் அதிகப்படியான உரப் பயன்பாட்டைத் தவிர்த்து, உரச் செலவைக் குறைக்க முடியும் என்பதையும் எடுத்துரைத்தனர். சரியான நைட்ரஜன் மேலாண்மை மூலம் பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூலை மேம்படுத்துவதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பையும் குறைக்க முடியும் என மாணவிகள் விளக்கினர்.

இந்த செயல்விளக்கம் விவசாயிகளுக்கு LCC-ஐ வயல் நிலையில் எளிமையாகப் பயன்படுத்தி, நைட்ரஜன் உர மேலாண்மையை திறம்பட மேற்கொள்வதற்கான நடைமுறை அறிவை வழங்கியது.

# பருப்பு உற்பத்தி சுயசார்பு குறித்து விரிவான வழிகாட்டுதல் பயிற்சி



திருப்பத்தூர், ஆக.20

திருப்பத்தூர் வட்டார வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், அட்மா (ATMA) திட்டத்தின் கீழ் பருப்பு உற்பத்தியில் சுயசார்பு' (Self - sufficiency in Pulses) என்ற தலைப்பில் சிறப்பு விவசாயிகள் பயிற்சி மற்றும் ஆலோசனைக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திருப்பத்தூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (JDA) மணி, தலைமை தாங்கி, மாவட்டத்தில் பருப்பு வகை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிப்பது மற்றும் உற்பத்தியை பெருக்குவதன் அவசியம் குறித்து விளக்கிப் பேசினார்.

இவ்விழாவிற்கு திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (ADA) சுரேஷ்குமார், முன்னிலை வகித்து வரவேற்புரை ஆற்றினார். அவர் உழவர் நலத்துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய திட்டங்கள் மற்றும் தரமான விதை விநியோகம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற வேளாண் இணை இயக்குநர் பெரியசாமி, பருப்பு சாகுபடியில் மண் வளம் காத்தல் மற்றும் நவீன தொழில் நுட்பங்களை கையாள்வதன் மூலம் விவசாயிகள் எவ்வாறு அதிக லாபம் பெறலாம் என்பது குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து, வேளாண்மை அலுவலர் (புநு) நவீன்குமார், பருப்பு பயிர்களுக்கான உர மேலாண்மை மற்றும் நீர் மேலாண்மை நுட்பங்கள் குறித்து தொழில்நுட்ப உரை ஆற்றினார். இக்கூட்டத்தில் பாலாறு வேளாண் கல்லூரி தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கு. விக்னேஷ், கலந்து கொண்டு, பருப்பு பயிர்களைத் தாக்கும் வேரழுகல் நோய், சாம்பல் நோய் மற்றும் மஞ்சள் தேமல் போன்ற முக்கிய நோய்

களைக் கண்டறிந்து, அவற்றைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் கூடிய விரிவான விளக்கங்களை அளித்தார்.

இப்பயிற்சி முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அட்மா (ATMA) திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் (BTM) மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் (ATM) சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து செய்திருந்தனர். இம்முகாமில் திருப்பத்தூர் வட்டாரத்தைச் சேர்ந்த திரளான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# வேளாண்மை இணை இயக்குனர் தலைமையில் மானிய விலையில் விதைகள் வழங்கப்பட்டது



திருவள்ளூர், ஆக.20

திருவள்ளூர் மாவட்டம், திருவலாங்காடு வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் நடப்பு பருவத்தில் தேசிய சமையல் எண்ணெய் இயக்க திட்டத்தின் கீழ் நிலக்கடலை தொகுப்பு, செயல் விளக்க திடல் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள் மானிய விலையில் வழங்கப்பட்டது.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் ஆ. உமா மகேஸ்வரி தெரிவித்ததாவது, திருவாலங்காடு வட்டாரத்தில் கனகம்மாசத்திரம் துணை வேளாண் விரிவாக்கம் மையத்தில் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் 2026-27 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் 150 விவசாயிகளுக்கு மானிய விலையில் நிலக்கடலை விதைகள், நிலக்கடலை தொகுப்பு செயல் விளக்க திட்டம் மூலம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தினை திருவள்ளூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கே.செல்வராஜ் மற்றும் வேளாண்மை துணை இயக்குனர் மாநில திட்டம் ஸ்ரீ சங்கரி, கலந்து கொண்டு சுமார் 100 க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் நிலக்கடலை விதைகள் விநியோகம் செய்து வைத்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை திருவலங்காடு வேளாண்மை துணை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் பூனிமாங்காடு, காஞ்சிபாடி, மற்றும் அருங்குளம் செய்து இருந்தனர்.

இந்நிகழ்வில் காஞ்சிபாடி, கூலூர், முத்து கொண்டாபுரம், சிவாடா, பனப்பாக்கம், அருங்குளம், நெடும்பரம், குப்பம், ஆற்காடு போன்ற பகுதி விவசாயிகள் சுமார் 100க்கும் மேற்பட்டோர் மானிய விலையில் நிலக்கடலை விதைகளை பெற்று சென்றனர்.

# VAM நுண்ணுயிர் உர உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, ஆக.20

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் துய்யம் பூந்துறை பஞ்சாயத்திற்கு உட்பட்ட செங்கரபாளையம் கிராமத்தில் உள் மாவட்ட அளவில் VAM நுண்ணுயிர் உர உற்பத்தி தொழில்நுட்பம் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி பசுந்தாள் பயிர்களின் மூலம் மண்வளத்தை மேம்படுத்துதல் இரசாயன உரங்களின் பயன் பாடுகளை குறைத்து அங்கக உர பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும். மேலும் உயிர் உரங்களின் பயன்கள் பற்றியும் இதன் மூலம் மண்வளம் காக்கப்படும் என்பதை தெளிவாக எடுத்துரைத்தார்.

அரசப்பன், துணை வேளாண்மை இயக்குநர் (ஓய்வு), நுண்ணுயிர் உர உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக பயிற்சி அளித்தார். நந்தகுமார், துணை வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி, வேளாண்மை உழவர் நலத்துறை மானியத் திட்டங்கள் மற்றும் நுண்ணீர் பாசனம் குறித்து விளக்கினார்.

அ.பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக் குறிச்சி, உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார்.

பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தண்ணீர் மேலாண்மை முறைகள்

தண்ணீர் என்பது உயிர்களின் அடிப்படை ஆதாரமாகும். விவசாயத் துறையில் தண்ணீரின் பங்கு மிக முக்கியமானது. ஆனால் இன்றைய நிலையில் மழைப்பொழிவு குறைவு, நிலத்தடி நீர் குறைவு, மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய காரணங்களால் தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் தண்ணீரை சிக்கனமாகவும் அறிவார்ந்த முறையிலும் பயன் படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இதனை உறுதிப்படுத்தும் முறைகளே தண்ணீர் மேலாண்மை முறைகள் ஆகும்.

**தண்ணீர் மேலாண்மை என்றால் என்ன?**

தண்ணீரை சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான இடத்தில் பயன்படுத்துவது தண்ணீர் மேலாண்மை எனப்படுகிறது.

**இதன் முக்கிய நோக்கங்கள்**

- தண்ணீர் வீணாவதைத் தவிர்த்தல்
- பயிர்களுக்கு தேவையான அளவு தண்ணீர் வழங்குதல்
- நிலத்தடி நீரை பாதுகாத்தல்
- அதிக விளைச்சல் பெறுதல்



**தண்ணீர் மேலாண்மையின் அவசியம்**

- மழைப்பொழிவு குறைந்து வருகிறது
- நிலத்தடி நீர் அளவு குறைகிறது
- நீர் வீணாகும் பழக்கம் அதிகம்
- பயிர்களின் நீர் தேவைகள் அதிகரிப்பு

இதனால் தண்ணீர் மேலாண்மை முறைகள் அவசியமாகின்றன.

**முக்கிய தண்ணீர் மேலாண்மை முறைகள்**

**1. துளி பாசனம் (Drip Irrigation)**

- தண்ணீரை துளி வடிவில் நேரடியாக வேர் பகுதியில் வழங்கும் முறை.
- நீர் சேமிப்பு அதிகம்
- காய்கறி மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு ஏற்றது

**2. தெளிப்பு பாசனம் (Sprinkler Irrigation)**

- மழைபோல் தண்ணீர் தெளிக்கும் முறை.
- சமமான நீர் விநியோகம்
- மணல் வகை மண்ணிற்கு ஏற்றது

**3. மழைநீர் சேகரிப்பு (Rainwater Harvesting)**

- மழை நீரை சேகரித்து பின்னர் பயன்படுத்துதல்.
- நிலத்தடி நீர் அதிகரிப்பு
- நீர் பற்றாக்குறை குறைவு

**4. பண்ணை குளம் (Farm Pond)**

- பண்ணையில் சிறிய குளம் அமைத்து நீர் சேமித்தல்.
- வறட்சிக்காலத்தில் பயன்படும்
- நீர் சேமிப்பு அதிகரிப்பு

**5. மண் ஈரப்பதம் பாதுகாப்பு**

- மண்ணில் மூடுபயிர்கள் (Mulching) பயன்படுத்துதல்
- நீர் ஆவியாகாமல் பாதுகாத்தல்
- நவீன தண்ணீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள்
- சென்சார் அடிப்படையிலான பாசனம்
- ஸ்மார்ட் பாசன அமைப்புகள்
- துல்லிய விவசாயம் (Precision Farming)
- ட்ரோன் கண்காணிப்பு



இந்த முறைகள் நீர் பயன்பாட்டை மேலும் சிக்கனமாக்குகின்றன.

**தண்ணீர் சேமிப்பு முறைகள்**

- கால்வாய் பராமரிப்பு
- மண் கட்டுப்பாட்டு அணைகள் அமைத்தல்
- பாசன நேரத்தை கட்டுப்படுத்தல்
- நீர் வீணாவதைத் தடுக்கும் விழிப்புணர்வு

**தண்ணீர் மேலாண்மையின் நன்மைகள்**

- நீர் சேமிப்பு
- அதிக விளைச்சல்
- செலவு குறைவு
- நிலத்தடி நீர் பாதுகாப்பு
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**சவால்கள்**

- தொழில்நுட்ப அறிவு குறைவு
- முதலீட்டு செலவு
- பராமரிப்பு சிரமம்
- விழிப்புணர்வு குறைவு

**இந்தியாவில் தண்ணீர் மேலாண்மை**

இந்தியாவில் பல அரசு திட்டங்கள் மூலம் தண்ணீர் மேலாண்மை ஊக்குவிக்கப்படுகிறது. குறிப்பாக மைக்ரோ பாசன திட்டங்கள் விவசாயிகளுக்கு உதவுகின்றன.

தமிழ்நாட்டிலும் தண்ணீர் சேமிப்பு மற்றும் பாசன முறைகள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன.

**எதிர்கால நோக்கு**

- ஸ்மார்ட் பாசன முறைகள் அதிகரிக்கும்
- நீர் சேமிப்பு தொழில்நுட்பங்கள் மேம்படும்
- விவசாயிகள் விழிப்புணர்வு அதிகரிக்கும்

**முடிவுரை**

தண்ணீர் மேலாண்மை முறைகள் விவசாயத்தின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை. தண்ணீரை சிக்கனமாக பயன் படுத்தினால் மட்டுமே எதிர்காலத்தில் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்ய முடியும்.எனவே, ஒவ்வொரு விவசாயியும் தண்ணீர் மேலாண்மை முறைகளை கடைப்பிடித்து செயல்பட வேண்டும்.

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com***

